

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தேவாங்கர் கலைக்கல்லூரியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமண ஆணையினை வழங்கினார். உடன் சுந்தரலட்சுமி சிவப்பிரகாசம், ஏ.கே.மணி, தலைமை செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, கே.வி.கே.பிரபாகரன், பாலகணேஷன், பொன்ராஜ், பழனிச்சாமி, பாபுஜி, பாலச்சந்தர் ஆகியோர்கள் இருந்தனர்.

### முன் வெளியீட்டுத் திட்டத்தில் பதிவு செய்யப்படுகிறது!

# பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுத்தடைவுகள் 16 தொகுதிகள் !

### ஆ.ராசா எம்.பி. – நூல் வெளியிட – கி.வீரமணி–தொல். திருமாவளவன் – சுப. வீரபாண்டியன் – தி.வேல்முருகன் சிறப்புரை!

சென்னை, டிச.24-

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் எழுத்தாக்கங்கள் முழுவதும் தொகுக்கப்பட்டு பதினாறு தொகுப்புகளாக வெளியிடப்படுகின்றன.

வருகிற 5.1.2025 அன்று சென்னை வண்டலூர் - கோவிலஞ்சேரி - வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (வி.ஐ.டி.) வளாகத்தில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுத்தடைவுகள் - 16 தொகுதிகளாக வெளியிடப்படுகின்றன.

இந்நிகழ்ச்சியில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. நூல்களை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றுகிறார்.

நூல்களை வி.ஐ.டி. துணைவேந்தர் கோ.விசுவநாதன் பெற்றுக்கொள்கிறார்.

மேலும் நூல்களை சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., ஔவை ந.அருள், திரைப்படக் கலைஞர் பொன்வண்ணன், எஸ். பாலாஜி (எம்.எல்.ஏ. - வி.சி.க.), மல்லை சத்யா (ம.தி.மு.க.), முன்னாள் எம்.எல்.ஏ. வீ.தமிழ்மணி ஆகியோர் பெற்றுக்கொள்கின்றனர்.

இதில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன், ஊடகவியலாளர் ப.திருமாவேலன், ம.தி.மு.க. பொருளாளர் மு.செந்திலதிபன், சூலூர்-பாவேந்தர் பேரவை - செந்தலை ந.கவுதமன், வாலாசா வல்லவன், பேராசிரியர் த.செய ராமன், ப.மருதநாயகம், சு.குமணராஜா, ஆரூர் புதியவன் ஆகியோர் வாழ்த்தி சிறப்புரையாற்றுகின்றனர்.

மா.பூங்குன்றன், இறை. பொற்கொடி ஆகியோர் தலைமையில் தொடக்க உரைகளை கி.குணத்தொகையன், ப.அருளியார் மற்றும் தமிழக மக்கள் முன்னணி தோழர் பொழிலன் ஆகியோர் ஆற்றுகின்றனர்.

கோ.பாவேந்தன் ஒருங்கிணைப்புரையில், இ.அங்கயற்கண்ணி நன்றியுரை கூறுகிறார்.

பாவலரேறு பெருஞ்சித்தனாரின் எழுத்தடைவுகள் முன்வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகிறது.




சென்னையில் கழக ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் கூட்டம் நேற்று நலக் குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தூத்துக்குடி ஆதிபராசக்தி நகரில் தேங்கியிருக்கும் வெள்ளநீரை வெளியேற்ற ஏதுவாக Hitachi மற்றும் JCB இயந்திரங்களின் மூலம் எட்டயபுரம் சாலை பகுதியில் வழித்தடம் ஏற்படுத்தி, வெள்ளநீர் வெளியேற்றும் பணியை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான திருமதி. கீதாஜீவன் 'பார்வையிட்டார்.உடன் நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் ஆறுமுக நயினார் மற்றும் உதவி பொறியாளர் உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், பகுதி செயலாளர் ஜெயக்குமார், மாவட்ட பிரதிநிதி செல்வகுமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அபிராமிநாதன், மாநகர சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பொன்னுச்சாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

### ஆதிதிராவிடர்களுக்கு எதிரான இயக்கம் பா.ஜ.க. என்பது தெளிவாகிறது!

# அண்ணல் அம்பேத்கரை இழிவுபடுத்துவதா ?

### அமித்ஷாவுக்கு – கழக ஆதிதிராவிடர் நலக்குழு கண்டனம்!

சென்னை, டிச.24-

“அண்ணல் அம்பேத்கரை இழிவுபடுத்திய ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவுக்கு கழக ஆதிதிராவிடர் நலக்குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம், ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., தலைமையில் சென்னை, சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பில் நடைபெற்றது.

தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் அவரச ஆலோசனை கூட்டம், ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., தலைமையில் துணைத்தலைவர் மா.மதிவேந்தன் மற்றும் இணைச் செயலாளர்கள் மருதூர் ராமலிங்கம், வி.பி. இராசன், செ.புஷ்பராஜ், திப்பம்பட்டி ஆறுசாமி ஆகியோர் முன்னிலையில் சென்னை, சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக ஆக்கப்பணிகள் மற்றும் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதுவருமாறு :-

இந்திய அரசியலமைப்பின் தந்தை அண்ணல் அம்பேத்கர் அவர்களை நாடாளுமன்றத்தில் இழிவுபடுத்தி பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவின் பேச்சு கண்டிக்கத்தக்கது. மேலும் பா.ஜ.க.வின் அரசியல் நோக்கம் ஆதிதிராவிடர்களுக்கும், அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கும் எதிரான இயக்கம் என்பது இதன் மூலம் தெளிவாகிறது. இச்செயலை ஆதிதிராவிடர் நலக்குழு மிகவும் வன்மையாக கண்டிக்கிறது.

அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவு படுத்தி பேசிய பாஜகவின் விஷப் பேச்சுக்கு எதிராக அண்ணல் அம்பேத்கரின் புகழ் பாதுகாக்க இந்தியாவில் முதன் முதலில் போராட்டத்தை அறிவித்த கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் நன்றியும், பாராட்டுதலையும் தெரிவிக்கிறது.

நேற்று முன்தினம் (22.12.2024) நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழகத் தலைவர் உரையில் வைத்த வேண்டுகோளுக்கு ஏற்ப 2026ஆம் சட்டமன்றத் தேர்தலில் ஆதிதிராவிடர் மக்களின் வாக்குகளை திமுக பெற கடுமையாகப் பணியாற்றிட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர்கள் ச.தசரதன், பி.துரைசாமி, மு.பொன்தோஷ், பரமானந்தம், மாரியப்பன் கென்னடி ஆகியோர் கலந்து கொண்டனர்.


# ஆழ்ந்த இரங்கல்



புதுக்கோட்டை
தி.மு.க மாநகர செயலாளர்

# ஆ.செந்தில்

அவர்கள்

நேற்று (23.12.2024 – திங்கட்கிழமை)
இயற்கை எய்தினார். அன்னாரை
இழந்து வாடும் குடும்பத்தினருக்கும்,
உறவினர்களுக்கும் ஆழ்ந்த
இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

...ஆழ்ந்த வருத்தத்துடன்...

மாண்புமிகு. **எஸ்.ரகுபதி** B.Sc.,B.L., சட்டத்துறை அமைச்சர் மாவட்ட கழகச் செயலாளர்

**புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க**